| | | |
|---|---|---|
| **O.S No.** | **:** | **21/2020** |
| **DATE** | : | **15.04.2026** |
| **பெயர்** | : | **வேலு** |
| **தந்தை பெயர்** | : | **முனுசாமி** |

**<u>பிரதிவாதி தரப்பு வா.சா. 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

இந்த வழக்கில் பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 111/2007 என்று நான் ஒரு வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு எனக்கு எதிராக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பிற்கு எதிராக மேல் முறையீடு 1/2012 தாக்கல் செய்து அதுவும் எங்களுக்கு எதிராக தீர்ப்பானது என்றால் சரிதான். ஆகவே மேற்படி பதிவு செய்யப்படாத ஆவணத்தின் அடிப்படையில் நான் எந்த பரிகாரமும் கோர இயலாது என்றாலும், அந்த ஆவணம் செல்லாதது என்றாலும் சரியல்ல.

வா.சா.ஆ–2 ஆவணம் பிரதிவாதி தனது பெயரில் வாங்கிய பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். பிரதிவாதி 2018ல் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பட்டா எண் 1071 என்றது பிரதிவாதியின் பெயரில் தாவா சொத்திற்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் கிரையம் வாங்கி தாவா சொத்தில் பிரதிவாதி சுவாதினத்தில் இருப்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல, நான் தான் சுவாதினத்தில் உள்ளேன். இதே வழக்கு மூலத்திற்கு ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல்

நான் சுவாதினத்தில் இல்லை என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN

Additional District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN
Date: 2026.04.15 19:26:52 +0530